## தெலுங்கானா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் - 2023

# தெலுங்கானா மாநில அனைத்து கழக அமைப்புகளும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றிக்கு பாடுபட வேண்டும்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

வருகிற 2023 நவம்பர் 30 அன்று தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டுமெனவும், தெலுங்கானா மாநிலக் கழக அமைப்பு உள்ளிட்ட அனைத்து அமைப்புகளில் உள்ள நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் தேர்தல் பணிக்குழு அமைத்து, காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து தேர்தல் பணியாற்றி, அக்கட்சி வேட்பாளர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்,**
*சென்னை18.* *தி.மு.க.*



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அல்அமீன் நகரில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மதுரை மாநகராட்சி ஆணையாளர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் , மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் மற்றும் மண்டலத்தலைவர் வாசுகி சசிகுமார், பகுதி செயலாளர்கள் சசிகுமார், மருதுபாண்டி, கௌரி சங்கர், மாணவரணி ஆதிசங்கர், மாமன்ற உறுப்பினர்கள் ராதிகா கௌரி சங்கர், செந்தில்குமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர் .

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# நெல்லை மாநகரக் கழக அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் சிறப்புரை!

நெல்லை நவ.22-

கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர கழக சார்பு அணிகளின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் மாநகர அலுவலகத்தில் பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை

(பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம் ஆகியோர் தலைமையில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, துணை அமைப்பாளர் மாயா,மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன்,செல்வம்,அன்பழகன் என்ற ரவி,மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் நச்சினார் இனியன், மாவட்ட பிரதி வேங்கை வெங்கடேஷ், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநகர சார்பு அணிகளின் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிறைவில் தொழிலாளர் அணி அமைப்பாளர் பெப்சி சரவணன் நன்றி உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

நெல்லை மாநகர விவசாய அணி தலைவர் முத்து அவர்களின் தாத்தா குணசேகரன் மறைவு,நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி அவர்களின் சகோதரியின் கணவர் சுப்பிர மணியன் அவர்கள் மறைவு, பேட்டை மேலப்பாளையம் பகுதி அவைத்தலைவர் வழக்கறிஞர் உமா மகேஸ்வரன் அவர்களின் தாத்தா சுப்பிரமணியன் அவர்கள் மறைவு, பேட்டை பகுதி முன்னாள் 49 வது வார்டு வட்ட பிரதிநிதி துரை அவர்கள் மறைவு.

நெல்லை மாநகரம் பாளையங்கோட்டை பகுதிக்கு உட்பட்ட 33வது வட்ட பிரதிநிதி கண்ணன் அவர்களின் தாயார் தங்கம்மாள் அவர்கள் மறைவு. நெல்லை மாநகரம் பாளையங்கோட்டை பகுதி துணை செயலாளர் முகமது கமாலுதீன் அவர்களின் தாயார் சவுத்தாள் பீவி அவர்கள் மறைவு.நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன் அவர்களின் தந்தை பி.பி.மாரியப்பன் அவர்கள் மறைவு ஆகியோரின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

வருகிற டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கம் பாளையத்தில் "மாநில உரிமை மீட்பு மாநாடு என்னும் மையக்கருத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு மாநில உரிமை மீட்பு பேரணியாக இருசக்கரவாகன பேரணியை நெல்லை மாநகரத் தில் நடத்திய கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

தமிழ்நாட்டிற்கு எதிராகவும்,தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும், தொடர்ச்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் ரவி அவர்கள் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்களை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சிறப்பு கூட்டத்தை கூட்டி,சட்ட முன் நடவடிக்கைகளை மீண்டும் நிறைவேற்றிட ஆளுநர்க்கு அனுப்பிய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.தமிழ்நாடு பெண்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும் ஏழை,எளிய குடும்பங்களில் மகிழ்ச்சி பெருகிடவும் குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் கலைஞர் உரிமைத்தொகையாக ரூபாய் 1000-ம் வழங்கியவரும் முதலமைச்சர் அவர்கள் இந்த மாதம் இத்திட்டத்தின் 2ம் கட்டமாக கூடுதலாக 7 லட்சத்து 35,000 குடும்ப தலைவிகளுக்கு கலைஞர் உரிமைத் தொகை வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர்அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி வரும் டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கம் பாளையத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடான மாநில உரிமை மீட்பு மாநாட்டில் நெல்லை மாநகர கழக சார்பு அணிகளின் சார்பில் 300 பேர் கலந்து கொள்ளுதல் என்றும்.

கழகத்தின் எதிர்காலம், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர கழக சார்பு அணிகளின் சார்பில் அன்னதானம் வழங்குதல், மரம் நடுதல்,ஏழை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம்,கல்வி ஊக்கத் தொகை வழங்குதல்,தெருமுனை கூட்டங்கள் நடத்துதல், கழக இருவண்ண கொடி பட்டொளி வீசி பறக்கும் வகையில் நெல்லை மாநகரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கழக கொடிக் கம்பங்கள் நட்டி கழக கொடி யேற்றுதல் மற்றும் நலத்திட்ட நிகழ்வுகளை தொடர்ச்சியாக நடத்தி, பிறந்த நாளை கொண்டாடுதல் என்றும்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைஅமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த நீட் விலக்கு,நம் இலக்கு என்னும் மாபெரும் கையெழுத்து இயக்கத்திற்காக நெல்லை மாநகரக் கழக சார்பு அணிகளின் சார்பாக நீட் எதிர்ப்பு கையெழுத்து முகாம்கள் நடத்துதல் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஒரத்தநாடு கு.வை.ஆண்டியப்பன்**
**நவம்பர் 22 (2012)**



பகுத்தறிவு கொள்கைகள் கொண்ட நாடகங்களில் நடித்ததன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அறிமுகமாகி, பின்னர் கழகக் கொள்கைகளை பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்தவர்.

ஒரத்தநாடு ஒன்றியக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் – ஒன்றிய அவைத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர். குறிப்பாக, 'மிசா' கைதியாக சிறையில் இருந்தபோது தனக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு சிறைச்செல்வன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா

# பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி- அர.சக்கரபாணி வழங்கினர்

திண்டுக்கல், நவ.22-

திண்டுக்கல்லில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது. விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மொ.ந.பூங்கொடி தலைமை வகித்தார்.

விழாவில் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிழ்கள் மற்றும் கேடயங்கள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் .இ.பெ.செந்தில்குமார், வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் .ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் தன இளமதி ஜோதி பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், மகளிர் சுய உதவிக்குழு கடனாக ரூ.94.80 இலட்சம், பயிர்க்கடனாக ரூ.8.91 இலட்சம், கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக்கடன் ரூ.3.40 இலட்சம், மத்திய கால கடன் ரூ.24.50 இலட்சம், மாற்றுத்திறனாளிகள் கடன் ரூ.1.00 இலட்சம், நாட்டுப்புறக் கலைஞர்கள் கடன் ரூ.50,000, சிறு வணிகர்கள் கடன் ரூ.1.00 இலட்சம், என மொத்தம் ரூ.1.32 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஆட்சி நடத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள். அந்த வகையில் கூட்டுறவு வங்கியில் 5 பவுனுக்கு கீழ் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. பெண்கள் சுயஉதவிக்கு முக்கள் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயண சலுகை வழங்கப்பட்டுள்ளது சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

விவசாய நிலம் உள்ளவர்கள், சுய உதவிக்குழுவினர், சிறு வணிகர்கள் தவிர நிலமற்றவர்களுக்கும் கூட்டுறவு வங்கிகளில் கடனுதவிகள் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில்தான் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரி விரைவில் சொந்தக் கட்டடத்தில் செயல்படவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006-ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய ரூ.7,000 கோடி கடனை தள்ளுபடி செய்தார். விவசாயத்திற்கு இலவச மின்சாரத்தை வழங்கினார். மகளிர் சுய உதவிக்குழுவை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள் தான்.

அந்த வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெயண்கள் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர் கல்வி படிக்கும் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறார்கள்.

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். அவருக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இவ்விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

பெண்கள் முன்னேற வேண்டும், பெண்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலை பெறவேண்டும் என்பதற்காக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெண்களுக்கு சம உரிமை, பெண்களுக்கு சொத்தில் உரிமை, வேலை வாய்ப்பில் முன்னுரிமை, உள்ளாட்சியில் 33 சதவீதம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஒரு பொற்கால ஆட்சியினை நடத்தி வருகிறார்கள்.

கூட்டுறவு சங்கங்களின் கடன் இலக்கு ரூ.15,000 கோடி ரூபாய் என தமிழக அரசு நிர்ணயம் செய்துள்ளது. இலக்கை தாண்டி வருகின்ற மார்ச் மாதத்திற்குள் அனைத்து மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்களின் மூலம் கடன் வழங்கப்படவுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 33 நியாயவிலைக் கடைகளுக்கு ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் கிடைத்துள்ளது.

திண்டுக்கல் மண்டலத்தில் 339 நியாயவிலைக் கடைகளில் கியூஆர் கோடு மூலம் பணம் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 1500க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். கூட்டுறவு சங்கங்களில் காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.

விழாவில், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ரூ.13.63 இலட்சம், கூட்டுறவு கல்வி நிதி ரூ.9.09 இலட்சம், கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி, கூட்டுறவுப் பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் .இ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வழங்கினர்.

## முன்னாள் அமைச்சர்

# சி.வி.எம். அண்ணாமலை 107வது பிறந்த நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. -முன்னணியினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ.22 -

தந்தை பெரியார் அவர்களின் சீடராய், பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராய் விளங்கிய முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் 107 வது பிறந்தநாள் காஞ்சிபுரத்திலுள்ள கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., இல்லத்திலும், மாவட்டக் கழக அலுவலகத்திலும், கழக நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மகாலட்சுமி, பி.எம்.குமார், க.குமணன், பி.எம்.பாபு, கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், எம்.எஸ்.சுகுமார், செ.சிகாமணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், அ.யுவராஜ், வெங்கட்ராமன், தி.ராம்பிரசாத் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சி.வி.எம்.குடும்பத்தினர் என ஏராளமானோர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, கழக மாணவரணி செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசன் ஏற்பாட்டில், காஞ்சிபுரம் மாநகரின் பல்வேறு இடங்களில் ஏழை, எளியோருக்கு பசி ஆற்றும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.



திருப்பத்தூர் மாவட்ட வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி கோட்டம், வாணியம்பாடி, ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி சிறப்பு பட்டா முகாம் வாணியம்பாடி செங்குந்தர் திருமண மண்டபத்தில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களின் மனுக்களைப் பெற்று சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் பிரேமலதா, நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுடி, உதயேந்திரம் பேரூராட்சி தலைவர் பூசாராணி, ஆலங்காயம் பேரூராட்சி தலைவர் தமிழரசிவெங்கடேசன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.